**மாகாணக் கல்வித் திணைக்களம் - வடமாகாணம்**

**இரண்டாம் தவணைப் பரீட்சை -2023**

# கிறிஸ்தவம் - I

**தரம் - 11** | **மூன்றுமணித்தியாலம்**

மேலதிகவாசிப்பு 10 நிமிடங்கள்

## பகுதி I

1) யூதமத நீதிச்சட்டங்களை தனது சுய இலாபத்தின் பொருட்டு விளக்கம் கொடுத்தவர்

i.இயேசு ii.சதுசேயர் iii மோசே iv எசாயா

2) நாத்தான் வெல் என அழைக்கப்பட்டவன் யார் ?

i. யூதா ii. பிலிப்பு iii. பாத்தலமேயு iv. யாக்கோபு

3) கழுதை என்பது எதன் அடையாளமாகும் ?

i.தாழ்மை ii தன்னிறைவு iii வீரம் iv.நம்பிக்கை

4) இயேசுவைக் குறித்ததான பேதுருவின் அறிக்கை யாது ?

i.கடவுளால் இயலாதது ஒன்றுமில்லை

ii.காரிருளில் நடந்துவந்த மக்கள் பேரொளியைக் கண்டார்கள்

iii.பரலோக ராஜ்ச்சியம் சமீபமானதே

iv.நீர் கடவுளின் மெசியா

5) A. நீங்கள் வரிதண்டுபவர்களோடும் பாவிகளோடும் சேர்ந்து உண்பதும் குடிப்பதும் ஏன்?

B. உணவருந்தும் முன் இயேசு கை கழுவாததைக் கண்டு வியந்தனர்

C. கடவுளைப் பழிந்துரைக்கும் இவன் யார் ?

D. இறையாட்சி எப்போது வரும் ?

இக்கூற்றுக்களில் பரிசேயரும் மறைநூல் அறிஞர்களும் சேர்ந்து இயேசுவிடம் வினாவிய கேள்விகள் எவை ?

i. A B ii .B C iii. A C iv . B D

6) அன்னாவும் சிமியோனும் இயேசுவைப் பற்றிக் கூறிய கூற்று ?

i.மெசியா தருகின்ற மீட்பு ii.இயேசுவானவர் செய்கின்ற அற்புதம்

iii. பாவிகளை மன்னித்தல் iv.அடிமைத்தன வாழ்வை ஒழித்தல் .

7) ஆண்டவர் உண்மையாகவே எழுப்பப்பட்டார் என்று கூறியவர்கள் ?

i.மகதலா மரியா ii.கல்லறை சென்ற பெண்கள்

iii.ஏனைய சீடர்களிடம் சென்ற பேதுரு iv.எம்மாவூர் சென்ற சீடர்கள்

8) ''குரலொன்று முழங்குகின்றது பாலை நிலத்தில் ஆண்டவருக்காக வழியைச் செம்மையாக்குங்கள்''என்று உரைத்தவர்?

i.இறைவாக்கினர் எனயா

ii.இறைவாக்கினர்,மீட்கா

iii இறைவாக்கினர் மலாக்கி

iv இறைவாக்கினர் ஆமோஸ்

9) ''நான் என் தந்தையின் அலுவல்களில் ஈடுபட்டிருக்க வேண்டும் என்பது உங்களுக்குத் தெரியாதா'' என்பதிலிருந்து நாம் விளங்கிக் கொள்வது ?

i.நாம் பெற்றோரினைக் கட்டுப்படுத்த வேண்டும்

ii.எந்நேரமும் கோவிலில் இருக்க வேண்டும்

iii.இறையரசின் செயற்பாடுகளைப் புரிந்து கொள்ள வேண்டும்

iv.இறையரசை நமது கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும்

10) பழைய ஏற்பாட்டில் ''துன்புறும் பணியாளர்'' எனப்படுபவர்?

i. இயேசு ii எசாயா iii இஸ்ரேல் மக்கள் iv.யோபு

11) எலிசபத்தின் குணாதியமானது

i.கருத்துக்களைச் சரியான நேரத்தில் கூறுதல்

ii.நம்பிக்கையுடன் வாழ்தல்

iii. பிறரைச் சந்தேகித்தல்

iv.கடவுளுக்கு எதிராகச் செயற்படல்

12) எருசலேம் கோவிலில் இயேசுவைக் காண நின்ற இறைவாக்கினர்கள் ?

i.எசாயாவும் மலாக்கியாவும்

ii.சிமியோனும் அன்னாவும்

iii.செகரியாவும் எலிசபெத்தும்

iv. சீமோனும் யாக்கோவும்

13) ''மெசியா''என்பதன் கிரேக்கச் சொல் ?

i.அஸ்டோலோஸ் ii.சனகரிசம் iii.கிறிஸ்டொஸ் iv.லிப்பிலோ

14) அஞ்சாதே இன்று முதல் நீ மனிதரைப் பிடிப்பவர் ஆவாய்....... என்று இயேசுவால் யாருக்குக் கூறப்பட்டது.

i.யாக்கோபுவிற்கு ii யோவானிற்கு

iii.சீமோன் எனப்பட்ட பேதுருவுக்கு iv .யூதாஸ் காரியேத்திற்கு

15) இடிமுழக்கத்தின் மக்கள் என்ற பட்டப் பெயர் கொண்டவர்?

i.பிலிப்பு ii.யாக்கோபு iii.அந்திரேயா iv.மத்தேயு

16) அரிமத்தியா யோசேப்பின் செயற்பாடு என்ன?

i.யூதர்களுக்கு எதிராகச் செயற்பட்டார்

ii.இயேசுவின் உடலுக்கு மரியாதை செய்தார்

iii.இயேசுவுடன் அன்புடன் பழகினார்

iv.சத்தியத்திற்குக் கட்டுப்பட்டவர்

17) இயேசுவானவர் பிறந்து வளர்ந்த ஊர்கள் எவை?

i.எருசலேமும் கானானும் ii.பெத்தலேமும் நாசரேத்தும்

iii.பெத்தலேமும் கானானும் iv.எருசலேமும் நாசரேத்தும்

18) 1இதோ என் துாதனை அனுப்புகின்றேன்.அவர் எனக்கு முன் சென்று வழியை ஆயத்தம் செய்வார்.இவ்வாறு மலாக்கி இறைவாக்கினர் யாரைப் பற்றி முன்னுரைத்தார்?

i.இயேசு ii.எலியா iii.யோவான் iv.பேதுரு

19) மெசியாவின் மூலம் நாம் பெறும் ஒளி?

i.நோய்களிலிருந்து விடுதலை

ii.அமைதியும் சமாதானமும்

iii.அரசியல் விடுதலை

iv.எல்லாவற்றிலுமான முழுமையான வாழ்வு பெறல்

20) இறைவனது துாதர்கள் என அழைக்கப்பட்டோர்கள் ?

i.பரிசேயர் ii.லேவியர் iii.இறைவாக்கினர் iv.சதுசேயர்

21) யூத தலைமைச்சங்க உறுப்பினர் யார் ?

i.அரிமத்தியா யோசேப்பு ii.பிலிப்பு iii.பாத்திலமேயு iv.பரிசேயர்

22) தோரா என்பது யாருடைய நீதிச்சட்டமாகும் ?

i.இயேசுவின் ii.எலியாவின் iii.மோசேயின் iv.எசாயாவின்

23) ''ஈசாய் என்னும் அடி மரத்திலிருந்து தளிர் ஒன்று துளிர் விடும்'' என்று கூறிய இறைவாக்கினர் ?

i.மலாக்கி ii.எசாயா iii.எலியா iv.பவுல்

24) உலகின் பாவத்தைப் போக்கும் தெய்வாட்டுக்குட்டி …என இயேசுவைப் பற்றிக் கூறியவர்?

i.எசாயா iii.திருமுழுக்கு யோவான் iii.மலாக்கி iv காபிரியேல்

25) ஆபிரகாமின் மகன் என அழைக்கப்பட்டவர்?

i.சீமோன் ii.லேவி iii.சகேயு iv.இயேசு

26) a. உடல் நலங்குன்றியோரைக் குணப்படுத்தல்

b. இறையரசை அறிவித்தல்

c. பிணி தீர்த்தல்

d. இறையாட்சி நெருங்கிவிட்டது என அறிவித்தல்

இவற்றுள் 70 சீடர்களுக்குக் கொடுக்கப்பட்ட பொறுப்புக்கள் ?

i.a ,c ii.a ,d iii.b , c iv.c, d

27) செபதேயுவின் மக்கள் யாவர் ?

i.சீமோன் பேதுரு,அந்திரேயா. ii.லேவி ,யாக்கோபு

iii.யாக்கோபு, யோவான் iv.சீமோன் பேதுரு,யோவான்

28) சிலுவையில் அறையப்பட்ட இயேசுவிற்குச் சான்று பகிர்ந்தவர்?

i.மனந்திருந்திய கள்வன் ii.அசீசிஊர்பிரான்சிஸ்

iii.அரிமத்தியாவின் யோசேப்பு iv.சீரோன் ஊர் சீமோன்

29) திருமுழுக்குப் பெறுவதன் முக்கியத்துவம்

i.திருச்சபை அங்கத்துவம் ii.தூய்மையான வாழ்வு

iii.மனம் திரும்புதல் iv.தூய ஆவியின் வழிநடத்தல்

30) செக்கிரியா எலிசபெத்தின் குணாதிசயங்கள் அல்லாதது?

i.தாழ்மையும் உறுதிநிலையும்

ii.நீதியும் விசுசவாசமும்

iii.துதித்தலும் சந்தேகமும்

iv.ஒன்றை விளக்குவதற்கான ஆற்றல்

31) யூதரின் மரபுகள் எவை?

i.விருத்த சேதனமும் அர்ப்பணிப்பும் ii. விருத்த சேதனமும் உணவூட்டலும்

iii.அர்ப்பணிப்பும் தலைமைத்துவமும் iv.பிசங்கித்தலும் ஆராதித்தலும்

32) திருமுழுக்கு யோவானின் மூலம் பெறுகின்ற படிப்பினை?

i.மனம் திரும்புதல் ii.மன்னித்தல்

iii.பொறுமையாக இருத்தல் iv.அன்பு செலுத்துதல்

33) இயேசுவைப்பற்றிய நற்செய்தியை வானதூதரின் மூலம் பெற்றுக் கொண்டவர்கள் ?

i.செக்கரியா, மரியா ,இடையர் ii.செக்கரியா, யோசேப்பு ,சிமியோன்

iii. செக்கரியா ,எலிசபெத்து, யோசேப்பு iv. செக்கரியா, சிமியோன்,அன்னா

34) ''ஆழத்திற்குச் சென்று மீன் பிடிக்க வலைகளைப் போடுங்கள்'' என்று இயேசு யாருக்குக் கூறினார் ?

i.சீமோனுக்கு ii.யாக்கோபுவிற்கு iii.யோவானிற்கு iv. லேவிக்கு

35) பிற இனத்தவரின் தூதர் எனப்பட்டவர்?

i.லூர்க்கா ii.பவுல் iii.இயேசு iv.சீமோன்

36) சகேயுவின் மனந்திரும்பலுக்கான காரணம் ?

i.மக்கள் சகேயுவை வெறுத்தமை

ii.தனது பிழையை உணர்ந்தமை

iii.சகேயுவை இயேசு ஏற்றுக் கொண்டமை

iv.இயேசுவைக் காண ஆவலுடன் இருந்தமை

37) உன்னதக் கடவுளின் இறைவாக்கினர்?

i.திருமுழுக்கு யோவான் iii.மலாக்கி iii.எலியா iv.செக்கரியா

38) பரிசேயர் திருமுழுக்குப் பெறக் காரணம்?

i.இறைவனைப் புதிதாக அனுபவிக்க முடிந்தமை

ii.பிறரை உபசரிப்பதற்கு

iii.தன்னைப்பற்றி பிறரிடம் கூற

iv.பிறரிடமிருந்து தம்மைப்பிரித்துக் காட்டுவதற்கு

39) இயேசு உயிர்த்தெழுந்த நாள்?

i. 4ம்நாள் ii. 6ம்நாள் iii. 3ம்நாள் iv. 5ம்நாள்

40) இயேசு திருமுழுக்குப் பெற்ற இடம்?

i.நைல் நதி ii.இஸ்ரேல் நதி iii.யோர்தான் நதி iv.கஸ்பியன் கடல்

## பகுதி II

**முதலாம் வினா உட்பட ஏனைய ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

01.

1) ஒரு குழந்தை நமக்கு பிறந்துள்ளார். அவர் திருப்பெயரோ வியத்தகு ஆலோசனை அமைதியின் அரசர், இவ் இறைவாக்கை கூறிய இறைவாக்கினர்? இது யார் மூலம் நிறைவேறியது?

2) இயேசுவானவரின் மரணத்தின் போது இயற்கையில் ஏற்பட்ட 2 நிகழ்வுகள்?

3) இயேசுவானர் தமது சீடர்களை திருப்பணிக்கு அனுப்பிய போது கொடுத்த அறிவுரை, அதிகாரம் ஒன்று வீதம் தருக?

4) யூதரின் பின்வரும் மரபுகளின் வரலாற்று முக்கியத்துவம்

அ. விருத்தசேதனம்

ஆ. முதல் ஆண்பிள்ளை அர்ப்பணிப்பு

5) மெசியா பற்றிய கொள்கையுடன் தொடர்புடைய 2 சிறப்பம்சங்கள்?
6) சதுசேயர் இயேசுவிடம் வினாவிய இரு வினாக்கள்?
7) குழந்தை இயேசு எருசலேம் தேவாலயத்திற்கு கொண்டு வரப்பட்டபோது அவரை மெசியாவாக உணர்ந்து கொண்டுடோர் இருவர்?
8) யேசுவின் பிறப்பு பற்றி வானதூதரால் மேய்ப்பருக்கு கொடுக்கப்பட்ட இரண்டு அடையாளங்கள்?
9) யோர்தான் நதியில் திருமுழுக்கு யோவான் திருமுழுக்கு கொடுத்த வேளையில் அவரின் தாழ்மை வெளிப்பட இரு சந்தர்ப்பங்கள்?
10) இயேவுவானர் பிறந்த காலத்தில் பலஸ்தீனா எந்த வல்லரசின் கீழ் இருந்தது? அதன் பேரரன் யார்?

02."ஓய்வு நாளும் மானிட மகனுக்கு கட்டுப்பட்டதே"
1) மேற்குறித்த கூற்றினை கூற இயேசுவானவரை தூண்டிய பின்னணி?
2) நியாயப்படங்கள், பாரம்பரியங்களைவ ிட மனிதர்கள் முக்கியமானவர்கள் என இயேசு சுட்டிக்காட்டிய 3 சந்தர்ப்பங்கள்?
3) இயேவுவானவரின் முன் மாதிரியை பயன்படுத்தி இன்றைய சமுதாயத்தில் நலன்புரி செயல்களை மேற்கொள்ளக்கூடிய 5 வழிமுறைகள்?

03.
1) "மெசியா" என்ற வார்த்தையின் கருத்து என்ன? மெசியா தொடர்பாக இறைவாக்குரைத்த ஒரு இறைவாக்கினர் யார்?
2) இயேசுவின் பெயரில் அவரின் பெற்றோர் நிறைவேற்றிய 3 யூத பழக்கவழக்கங்களை குறிப்பிடுக?
3) இன்று இலங்கையில், கிறிஸ்தவ பழக்கவழக்கங்களும் சமய சடங்குகளும் பிறரை கவரும் வண்ணம் எவ்வாறு நிறைவேற்றப்படலாம்?

04.
1) இயேசுவானரின் கால சமுதாயத்தில் புறக்கணிக்கப்பட்ட இரு குழுக்கள்?
2) அவ்வாறு புறக்கணிக்கப்பட்ட குழுவினருக்காக இயேசுவானவர் செயற்பட்ட 3 சந்தர்ப்பங்களை குறிப்பிடுக?
3) இலங்கையில் மக்கள் முகங்கொடுக்கும் ஒடுக்குமுறைகள் ஐந்தினைக் குறிப்பிடுக?

05.
1) யூத சமுதாயத்தில் பரிசேயரின் நிலை? அவர்களின் மத்திய நிலையமாக இருந்த இடம்?
2) பரிசேயனாகிய சீமோன் இல்லத்தில் கைவிடப்பட்ட 3 யூத பழக்கவழக்கங்கள்?
3) பரிசேயரின் வெறுமையான ஆன்மீகத்தை புறக்கணித்து இயேசுவானவர் செயற்பட்ட முன்மாதிரையை பின்பற்றி சமுதாயத்தில் செயற்பட கூடிய 5 வழிமுறைகள்?

06.

1) “பாலைநிலத்தில் குரலொன்று கேட்கிறது…..” எனக்கூறிய இறைவாக்கினர்?

2) பின்வரும் வசனங்களின் கருத்தை எழுதுக.

அ. கோணலானவை நேராக்கப்படும்

ஆ. குன்று யாவும் தாழ்த்தப்படும்

இ. கரடுமுரடானவை சமதளமாக்கப்படும்

1) இன்று யேசுவானவர் எம்மத்தியில் வந்தால் கிறிஸ்தவரான உமக்கு அவர் தரும் சவால் என்ன? எவற்றிற்காக மனம் வருந்த எம்மை அழைப்பார்?

07. எவையேனும் இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக.

1) கிறிஸ்தவ ஒற்றுமை
2) சவால்கள் மத்தியில் பணி
3) கிறிஸ்தவ திருமுழுக்கு
4) சமாதானத்திற்கு அர்ப்பணிப்போம்